<u>IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.</u>

SC.No.171/2019 Date:15.06.2024.

அ.சா.1-முருகேசன்

<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 12 ம் வகுப்பு வரை படித்து முடித்துள்ளேன். எங்கள் குடும்பத்திற்கு பூர்வீகம் உளக்கசின்னனூர் என்றால் சரியல்ல. என் அப்பாவுடன் பிறந்தவர்கள் சின்னபையன், ஆறுமுகம் என்றால் சரிதான். என் சித்தப்பா சின்னபையனின் மகன் பழனிசாமி. 24.05.1976 ல் என் அப்பா, சின்னபையன், ஆறுமுகம் சேர்ந்து அவர்களது மைனர் மக்களை தரப்பினராக காண்பித்து குடும்ப சொத்துக்களை முத்துகவுண்டர் வகையறாவுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த கிரையத்தின் மூலம் கிடைத்த பணத்தை கொண்டு என் அப்பா பெயரில் கச்சுப்பள்ளி கிராமம் ச.எண்.360/1 ல் 4.58 செண்ட் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் சகோதரர் 04.03.1999 ல் சாலை விபத்தில் இறந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு என் சகோதரர் மனைவி என் மீதும், என் அப்பா மீதும் அ.வ.எண். 174/2000 என்ற வழக்கை சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் அந்த வழக்கில் வழக்கறிஞர் மூலம் எதிர்வாதம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது 23.08.2001 ல் ஒரு பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தின் படி நானும் என் தகப்பனாரும் ஒரு முச்சலிக்கா எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். 2000 ம் வருடம் என் தகப்பனாரை தாக்கியதாக சொல்லப்படும் சம்பவம் தொடர்பாக என் தகப்பனார் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக போலீஸ் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். அந்த புகாரை நான் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். 2000 ம் வருடம் மூலப்பாதையில் பஞ்சாயத்து நடந்ததாகவும் அதில் செல்வராஜ், கருப்பண்ணன், தேவேந்திரன், சின்னண்ணன் மற்றும் சிலர் கலந்து கொண்டதாகவும் பஞ்சாயத்தில் இருந்தவர்கள் என் அப்பாவை அடித்து உதைத்து கை, கால் எழும்பு முறிவு ஏற்படுத்தினார்கள் என்று நான் சொல்லியுள்ள சம்பவம் தொடர்பாக சங்ககிரி JM நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் என் அப்பாவும் சாட்சி சொன்னோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் விசாரணைக்கு பின்னர் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். 05.09.2009 அன்று நடந்ததாக சொல்லப்படும் சம்பவங்கள் அனைத்தும் எனக்கு

நேரடியாக தெரியும் என்றால் சரிதான். நானும், ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோர்கள் சேர்ந்து ஏற்படுத்தி கொண்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்தத்தின் தேதி 29.08.2007 என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் ச.எண். 360/1 ல் எந்த பகுதியை குறித்தது என்றால் கிழக்கு பகுதியை குறித்தது. நான் 28.07.2011 ல் சேலம் காவல் துறை கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாருடன் 20.10.2007 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை, 03.10.2007 தேதியிட்ட கிரைய பத்திரம், 24.11.2009 தேதியிட்ட 2 கிரைய பத்திரங்கள் ஒரு புகைபடம் இணைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரை நான் தமிழக முதல்வர் தனிப்பிரிவு மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த புகாரின் நகல் நீ.ம.சா.ஆ.1. நான் அ.சா.ஆ.1 புகார் கொடுத்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் சில நாட்கள் கழித்து தான் என்னை விசாரித்தார்கள். என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். நான் அ.சா.ஆ.1 புகாரிலும் போலீஸ் விசாரணையின் போதும் நான் ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோருடன் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.1 ல் நான் எதிரிகளில் சிலரில் அடாவடி செயல்களுக்கு பயந்து கொண்டு நான் ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோருக்கு மேற்படி சொத்துக்களுக்கு கடந்த 2007 வருடம் செப்டம்பர் மாதம் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 01.10.2007 அன்று அ.வ.எண்.246/2007 என்ற வழக்கை சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோர் 2, 3 எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என் அப்பா சேலம் காவல் காண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரை நான் ராஜேந்திரன், ராஜமாணிக்கத்திற்கு கொடுத்தேன் என்றால் சரிதான். என் அப்பா 19.10.2007 ல் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் தமிழ்செல்வன், கிருஷ்ணன், பேபி, பதிவாளர் பலராமன், சின்னராஜ் ஆகியோர் மீது புகார் கொடுத்து அது குற்ற எண். 429/2007 என வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அந்த குற்ற வழக்கில் உண்மையில்லை என்று போலீசாரால் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது அரசியல் செல்வாக்கு காரணமாக அவ்வாறு முடிக்கப்பட்டது. என் அப்பா திண்டுக்கல்லில் இருந்தவர்களிடம் ரூ.5, ரூ.10 பணம் பெற்று வீடு வந்து சேர்ந்ததாக என் அப்பா என்னிடம் தெரிவித்து அதன் பேரில் நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், என் புகாரிலும் போலீஸ் விசாரணையின் போதும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்

அப்பா என்னிடம் தன்னை மகுடஞ்சாவடியை சேர்ந்தவர்கள் கடத்தியதாக சொன்னார் என்று தான் நான் போலீஸ் விசாரணையின் போது சொன்னேன் என்றால் சரிதான். மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கடத்தி சென்று பல்வேறு பத்திரங்களில் கைரேகை உருட்ட செய்தும், கையில் பணம் கொடுப்பது போல் போட்டோ எடுத்து கொண்டு பணத்தை பிடுங்கி கொண்டார்கள் என்று தான் என் தகப்பனார் என்னிடம் சொன்னதாக தான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மகுடஞ்சாவடி ஈஸ்வரன் கோவிலுக்கு அழைத்து சென்று கல் தூணில் கட்டி வைத்து கை, கால்களை மடக்கி பிடித்து கைரேகை, கையெழுத்து ஆகியவற்றை பல பேப்பர்களிலும் பத்திரங்களிலும் வாங்கி கொண்டதாக என் தகப்பனார் சொன்னதாக நான் புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் அங்கு சார்பதிவாளர் பலராமன், பத்திர எழுத்தர்கள் பழனிசாமி, சின்ராஜ், பேபி, பழனியம்மாள் மற்றும் 10 நபர்கள் அங்கிருந்தார்கள் என்று என் அப்பா சொன்னதாக நான் போலீஸ் விசாரணையிலும், புகாரிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானும் ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோர் சேர்ந்து அ.வ.எண்.302/2007 என்ற வழக்கை சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் 29.08.2007 கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 4 முதல் 6 எதிரிகள் மீது 20.11.2007 அன்று தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தமும், அசல் தாவாவும் 2, 3 எதிரிகள் மீது ஏற்பட்ட கிரையத்திற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் தாவா மட்டும் தான் அதற்கு பின்பு தாக்கல் செய்யப்பட்டது, ஒப்பந்தம் அதற்கு முன்பே போடப்பட்டது. அ.வ.எண்.302/2007, 246/2007 வழக்கில் 1ம் எதிரி பற்றி எந்த வாதமும் புகாரும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிரி சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2, 3 எதிரிகள் ஆகியோர்களை எங்களது வீட்டிற்கு அனுப்பி அவர்கள் என் அப்பாவிடம் நிலத்தடி நீர் சோதிக்க வேண்டும் என்று சொல்லி அவரை உடனடியாக மகுடஞ்சாவடிக்கு அழைத்து சென்றுள்ளார்கள் என்று நான் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்த பின்பு தான் என் அப்பா தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை இரத்து செய்ததும், 2, 3 எதிரிகளுக்கு கிரையம் எழுதி கொடுத்ததும் எனக்கு தெரியவந்தது என்று நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கி பார்த்த வில்லங்க சான்றிதழை போலீசில் ஒப்படைத்தேன். என் சகோதரர் இறப்புக்கு பின்னர் அவரது மனைவி பேபி தன் தாயார் வீட்டிற்கு சென்று வசிக்கிறார் என்றால் சரிதான். அவர்கள் 2

குழந்தைகளுடன் கஷ்படுவதால் என் தாயார் அவருடன் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா எனக்கு எழுதி கொடுத்ததாக நான் சொல்லும் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் தேதி 12.07.2000 என்றால் சரிதான். நான் தான் என் தம்பி இறந்த பிறகு என் அப்பாவை கட்டாயப்படுத்தி அவரிடம் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. 21ம் எதிரி என் தகப்பனார் மீதும், என் மீதும் அ.வ.எண்.174/2000 என்ற வழக்கை சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மீதி பாதியையும் 26.04.2006 அன்று என் தகப்பனாரிடம் இருந்து எழுதி வாங்கி கொண்டேன் என்றால் அவர் தான் எனக்கு எழுதி கொடுத்தார். 26.04.2006க்கு பிறகு நான் என் அப்பாவை உதாசினப்படுத்தி அவர் சங்ககிரியில் கூலி வேலை செய்து நிராதரவாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால் அவர் 06.09.2007 அன்று தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு அன்றைய தினமே பேபியுடன் சேர்ந்து 2, 3 எதிரிகளுக்கு சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பணத்தை வாங்கி என் அப்பா கொஞ்சம் எடுத்து கொண்டு மனைவிக்கும், பேபிக்கும் கொடுத்தார் என்று எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல. இதை தெரிந்து நான் என் அப்பாவை என்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து கொண்டு திட்டம் தீட்டி 21.09.2007 அன்று ஒரு பொய்யான புகாரை சேலம் மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அது பொய் புகார் என்று போலீஸ் முடித்துவிட்டதால் நான் மீண்டும் 20.10.2007ல் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் ஒரு பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த புகாரும் உண்மையில்லை என்று முடிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது எதிரிகளின் அரசியல் செல்வாக்கு பயன்படுத்தி முடிக்கப்பட்டது. 2, 3 எதிரிகளிடம் இருந்து 4 முதல் 6 எதிரிகள் 03.10.2007ல் கிரையம் பெற்று கொண்டார்கள் என்றால் சரிதான். 4 முதல் 6 எதிரிகளிடம் அந்த சொத்தை கிரையம் வாங்க 1ம் எதிரி 2009 பங்குனி மாதம் பேச்சுவார்த்தை நடத்தியது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அதன் பிறகு தான் நான் அ.வ.எண்.129/2009 என்ற வழக்கை சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் 1ம் எதிரி மீது தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அவர் சொத்தை கிரையம் வாங்கிய பிறகு தான் தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கை நான் 18.04.2009 அன்று தாக்கல் செய்தேன் என்றால் தேதி நினைவு இல்லை. அந்த வழக்கில் 26.06.2009 அன்று 1ம் எதிரிக்கு தெரியாமல் நீதிமன்றத்தை ஏமாற்றி ஒருதலைபட்ச தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 13.11.2009 அன்று தான் 1ம் எதிரி 4 முதல் 6

எதிரிகளிடம் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 24.11.2009 அன்று நானும், என் மனைவி, என் மகன், மகள் சார்பதிவாளர் அலுவலகம் சென்றோம் என்றால் நாங்கள் செல்லவில்லை எங்களை கட்டாயப்படுத்தி அழைத்து சென்றார்கள். நாங்கள் அன்று தன்னிச்சையாக மனமுந்து 7 ம் எதிரிக்கு கிரையம் ஆவணம் எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் 7 ம் எதிரிக்கு கிரையம் கொடுத்த சொத்து மேல்புற பாகம் என்றால் சரிதான். அதே தேதியில் 7 ம் எதிரி அதே சொத்தை 1, 8 முதல் 10 எதிரிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நாங்கள் 7 ம் எதிரிக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் ராஜேந்திரன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு நினைவு இல்லை. 21.12.2009 ம் தேதி நான் 1, 8, 9 எதிரிகளிடம் ரூ.21,75,000/- என் தகப்பனார், மனைவி, மகன், மகள் ஆகியோருடன் சேர்ந்து வாங்கி கொண்டு ஒரு இரசீது எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி இரசீதை சாட்சியிடம் காட்டி கேட்ட போது அதிலுள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது தான் என்று சாட்சி சொல்லிவிட்டு அதை மீண்டும் வாங்கி படித்து பார்த்துவிட்டு அதை மறுக்கிறார். 24.11.2009 ல் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கொங்கணாபுரம் கிளையில் என் பெயரிலும் என் மனைவி, மகன், மகள் ஆகியோர் பெயரிலும் ரூ.21,00,000/- லட்சம் வைப்பீடு செய்தோம் என்றால் சரிதான். 21.12.2009 அன்று நானும், என் மனைவி, மகன், மகள், தகப்பனார் ஆகியோருடன் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று தன்னிச்சையாக 1, 8, 9 எதிரிகளுக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் பவர் பத்திரம் எழுதி கொடுத்து பணம் பெற்று கொண்டதற்காக அ.வ.எண்.246/2007, 302/2007 ஆகிய சிவில் வழக்குக்களை வாபஸ் வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் 1, 8, 9 எதிரிகளிடம் கூடுதலாக பணம் கேட்டதால் ராஜேந்திரன், ராஜமாணிக்கம் ஆகியோரை வைத்து பைசுல் பேசப்பட்டு அவர்கள் சொன்ன அறிவுரையின் பேரில் எதிரிகள் அதற்கு ஒப்பு கொண்டு சிவில் வழக்குகளை வாபஸ் வாங்குவதற்காக மேற்படி பவர் பத்திரத்தை எழுதி வாங்கி கொண்டு கூடுதல் பணம் கொடுத்தார்கள் என்றாலும், அந்த தொகைக்கு நாங்கள் இரசீதும் கொடுத்தோம் என்றாலும் சரியல்ல. அந்த பவர் பத்திரத்தில் ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் எதிரி தி.மு.க கட்சியில் கொங்கணாபுரம் ஒன்றிய செயலாளராக உள்ளார் என்றால் சரிதான். அவர் கச்சுப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் இயக்குநராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் எதிரியின்

அரசியல் எதிரிகளின் தூண்டுதலின் பேரில் நான் ஒரு வருடம் 10 மாதம் கழித்து இந்த புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் மற்றும் கிரைய ஆவணங்கள் செல்லாது என்று நான் இதுவரை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாணையில் எதிரிகள் மீது சொல்லியுள்ள குற்றசாட்டுகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மீண்டும் துர்லாபம் அடையும் எண்ணத்தில் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

05.09.2009 அன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஆனால் அன்றைய தினம் சம்பவம் நடந்ததாகவும் அது எனக்கு நேரடியாக தெரியும் என சொல்வதும் பொய் என்றாலும் அந்த சம்பவம் தொடர்பாக நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சம்பவங்களுக்கும் 2 ம் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2 ம் எதிரிக்கும் மற்ற எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிரி எங்கள் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்செல்வன், கிருஷ்ணன் ஆகியோரை எங்கள் வீட்டிற்கு அனுப்பி நிலத்தடி நீர் சோதிக்க வேண்டும் என்று சொல்லி அவரை மகுடஞ்சாவடிக்கு அழைத்து சென்றார்கள் என்று நான் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த குறுக்கு விசாரணையுடன் 2 ம் எதிரி 1 ம் எதிரியின் குறுக்கு விசாரணையை தனக்காக ஏற்றுக் கொள்கிறார்.

4 முதல் 6 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

4 முதல் 6 எதிரிகள் 2, 3 எதிரிகளிடம் இருந்து தான் சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் புகாரிலும், முதல் விசாரணையிலும் 4 முதல் 6 எதிரிகள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அவர்களை பற்றி சொல்லியுள்ளதாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 முதல் 6 எதிரிகளுக்கும், சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த குறுக்கு விசாரணையுடன் 4 முதல் 6 எதிரிகள் 1 ம் எதிரியின் குறுக்கு விசாரணையை தனக்காக ஏற்றுக் கொள்கிறார்கள்.

7, 8, 10, 11, 12, 15 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் வீட்டில் இருந்து மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகம் எவ்வளவு தூரம் என்றால் தெரியாது. நான் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுள்ளேன். சம்பவத்தின் போது சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அலுவலரின் பெயர் எனக்கு தெரியாது. 7 ம் எதிரியிடம் இருந்து 8, 10, 11, 12, 15 எதிரிகள் சுமூகமாக கிரையம் பெற்றது எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல. 11, 12, 15 எதிரிகளுக்கும், வழக்கு சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட எதிரிகள் மீது நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 10 நாட்கள் கழித்து 17 ம் எதிரி சமரசம் மற்றும் 3 நபர்களுடன் என் வீட்டிற்கு வந்ததாக நான் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 13 ம் எதிரியை பற்றி நான் புகாரில் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த குறுக்கு விசாரணையுடன் 7, 8, 10, 11, 12, 15 ம் எதிரிகள் 1 ம் எதிரியின் குறுக்கு விசாரணையை தனக்காக ஏற்றுக் கொள்கிறார்கள்.

3, 9, 18 ம் எதிரிகள் 1 ம் எதிரியின் குறுக்கு விசாரணையை தனக்காக ஏற்றுக்கொள்கிறார்கள்.

Sd/-முருகேசன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date: 15.06. 2024.

அ.சா. –

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date:15.06. 2024.

அ.சா. –

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date: 15.06. 2024.

அ.சா. –

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date:15.06. 2024.

அ.சா. –

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு  எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date:15.06. 2024.

அ.சா. –

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date:15.06. 2024.

அ.சா. -

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு  எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date:15.06. 2024.

அ.சா. -

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

SC.No. Date:15.06. 2024.

அ.சா. –

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு  எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :